22nd September 1958]

Tanks

* 394 *Q.*—Sri K. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the full tank level has been fixed for all the tanks in the ex-Ramanathapuram zamindari area; and

(*b*) whether there is any proposal to revise the ayacut of tanks wherever fixed so far?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) The full level has been fixed only for some of the tanks in the area referred to.

(*b*) No, Sir.

Sri K. RAMACHANDRAN : இந்த ஜமீன் பிரதேசங்களில், ஏற்கனவே ஜமீன்தார்கள் காலங்களிலேயே "புல் டாங்க் லெவல்" நிர்ணயிக்கப் பட்டிருந்தது. இதற்கும்; இப்போது நிர்ணயிக்கப்பட்டிருப்பதற்கும் ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா ? அப்படி வித்தியாசம் இருந்தால் அதனால் விவசாயம் ஏதாவது பாதிக்கப்பட்டிருக்கிறதா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இப்பொழுது ரிப்பேர் செய்கிற குளங்களில் "புல் டாங்க் லெவல்" வைக்கப்பட்டு வருகிறது. மதகு வேலை செய்யாததால் எவ்வளவு பாதகம் ஏற்படுகிறதோ அதை நீக்க கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. புதிதாக "புல் டாங்க் லெவல்" வைக்கிறதற்கு இல்லை.

Paramakudi-Ramanathapuram road

* 395 *Q.*—Sri K. RAMACHANDRAN : Will the Hon the Minister for Public Works be pleased to state—

(*a*) the present stage of the metalling of the Paramakudi-Ramanathapuram road running via Nainarkoil village in the Paramakudi taluk; and

(*b*) the probable date of its completion?

The Hon. Sri P. KAKKAN : (*a*) & (*b*) The work of upgrading the Ramanathapuram–Nainarkoil Road by metalling and black-topping has been sanctioned and is in progress. It is expected to be completed by 31st October 1958. There is no proposal on hand to metal the Paramakudi Nainarkoil Road which is another District Road under the control of the Ramanathapuram District Board.

Sri K. RAMACHANDRAN : ஸர், இந்த பரமக்குடி-ராமநாதபுரம் ரோடு என்று தான் முதலில் போடப்பட்டது. நயினார்கோவில் மிக முக்கியமான ஸ்தலமாக இருப்பதால் இந்த ரோட்டில் வேலை இப்போது நடந்து கொண்டிருக்கிறது. இதற்கு இடையில் இருக்கின்ற ஆறு மைல் மாத்திரம் டிஸ்ட்ரிக்ட் ரோடு என்பதில் அர்த்தமில்லை. ஆகவே இதையும் உடனடியாக சேர்த்து மெட்டல் ரோடு போடுவதற்கு சர்க்கார் முன் வருமா ?

The Hon. Sri P. KAKKAN : இப்போது உடனடியாக மேஜர் ரோடுகளைத் தான் எடுத்துக்கொள்ள முடியும். அதன் பின்னல் டிஸ்ட்ரிக்ட் ரோடு களைப்பற்றி கவனிக்க முடியும்.